## திருப்பூர் மத்திய மாவட்டம்

# பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

## பல்லடம் கிழக்கு, பல்லடம் மேற்கு, பல்லடம் வடக்கு, பல்லடம் தெற்கு - பொங்கலூர் கிழக்கு, பொங்கலூர் மேற்கு, பொங்கலூர் வடக்கு, பொங்கலூர் தெற்கு - திருப்பூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் அதற்குட்பட்ட வாக்குச்சாவடிகள் விவரம் -

# ஒன்றியக் கழக பொறுப்பாளர் நியமனம் மற்றும்

## திருப்பூர் தெற்கு மாநகரம், முத்தணம்பாளையம், ஆண்டிப்பாளையம், வீரபாண்டி ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் அதற்குட்பட்ட வாக்குச்சாவடிகள் விவரம் -

# வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் **திருப்பூர் மத்திய மாவட்டம், பல்லடம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட;**

பல்லடம் கிழக்கு, மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள் பல்லடம் கிழக்கு, **பல்லடம் மேற்கு, பல்லடம் வடக்கு, பல்லடம் தெற்கு** ஆகிய 4 ஒன்றியங்களாகவும் - பொங்கலூர் கிழக்கு, மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள் **பொங்கலூர் கிழக்கு, பொங்கலூர் மேற்கு, பொங்கலூர் வடக்கு, பொங்கலூர் தெற்கு** ஆகிய 4 ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்குச்சாவடிகள் கொண்டதாக அமைவதோடு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

அதுபோலவே, **திருப்பூர் தெற்கு மாநகரம், முத்தணம்பாளையம் பகுதிக்குட்பட்ட** மூன்று வட்டங்கள் 6 **வட்டங்களாகவும் - ஆண்டிப்பாளையம் பகுதிக்குட்பட்ட** நான்கு வட்டங்கள் 8 **வட்டங்களாகவும் - வீரபாண்டி பகுதிக்குட்பட்ட** 3 வட்டங்கள் 6 **வட்டங்களாகவும்** பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட வட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்குச்சாவடிகள் கொண்டதாக அமைவதோடு, அவ்வாறு பிரிக்கப்பட்ட வட்டங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவ்வாறு நியமிக்கப்பட்ட வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழகச் செயலாளர்கள் கீழ் பணியாற்றுவார்கள்.

அத்துடன், **திருப்பூர் தெற்கு ஒன்றியத்தில் உள்ள 3 ஊராட்சிகள் மற்றும் பல்லடம் நகரத்தில் உள்ள 18 வார்டுகள்** கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்குச் சாவடிகள் கொண்டதாக அமையும்.

**பல்லடம் கிழக்கு ஒன்றியம்** : 78,79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94 ஆகிய 17 வாக்குச் சாவடிகள் கொண்ட கணபதிபாளையம் ஊராட்சி - 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51 ஆகிய 15 வாக்குச் சாவடிகள் கொண்ட ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சி - 30, 31, 32, 33, 34 ஆகிய 5 வாக்குச் சாவடிகள் கொண்ட மாணிக்காபுரம் ஊராட்சி என மொத்தம் 3 ஊராட்சிகள்.

**பல்லடம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : நா. சோமசுந்தரம்,** 3/4, மலையம்பாளையம், கணபதிபாளையம் (அ), திருப்பூர்-641605.

**பல்லடம் மேற்கு ஒன்றியம் :** 169, 170, 171, 172, 173 ஆகிய 5 வாக்குச் சாவடிகள் கொண்ட வடுகபாளையம் புதூர் ஊராட்சி - 174, 175, 176 ஆகிய 3 வாக்குச் சாவடிகள் கொண்ட சித்தம்பலம் ஊராட்சி - 158, 159, 160, 161 ஆகிய 4 வாக்குச் சாவடிகள் கொண்ட கிருஷ்ணாபுரம் ஊராட்சி - 162, 163 ஆகிய 2 வாக்குச் சாவடிகள் கொண்ட அனுப்பட்டி ஊராட்சி - 25, 26, 27, 28, 28 ஆகிய 5 வாக்குச் சாவடிகள் கொண்ட சுக்கம்பாளையம் ஊராட்சி - 164, 165, 166, 167, 168 ஆகிய 5 வாக்குச் சாவடிகள் கொண்ட பணிக்கம்பட்டி ஊராட்சி - 142, 143, 144, 145 ஆகிய 4 வாக்குச் சாவடிகள் கொண்ட அய்யம்பாளையம் ஊராட்சி - 135,136, 137, 138, 139, 140, 141 ஆகிய 7 வாக்குச் சாவடிகள் கொண்ட செம்மிபாளையம் ஊராட்சி என மொத்தம் 8 ஊராட்சிகள்.

**பல்லடம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் : சு. கிருஷ்ணமூர்த்தி,** 1/208, சித்தம்பலம் பிரிவு மேற்கு, வெங்கிட்டாபுரம் (அ), திருப்பூர்-641658.

**பல்லடம் வடக்கு ஒன்றியம் :** 1, 2, 3, 4, 5, 6, 7 ஆகிய 7 வாக்குச் சாவடிகள் கொண்ட பூமலூர் ஊராட்சி - 34, 35, 36 ஆகிய 3 வாக்குச் சாவடிகள் கொண்ட 63. வேலம் பாளையம் ஊராட்சி - 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 75, 76, 77 ஆகிய 26 வாக்குச் சாவடிகள் கொண்ட கரைப்புதூர் ஊராட்சி என மொத்தம் 3 ஊராட்சிகள்.

**பல்லடம் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : கே.பி.சீனிவாசன்,** 147-ஏ,சின்னபெரியான் தோட்டம், கிடாத்துரை, பூமலூர் (அ), திருப்பூர்-641 663.

**பல்லடம் தெற்கு ஒன்றியம் :** 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 ஆகிய 10 வாக்குச் சாவடிகள் கொண்ட இச்சிப்பட்டி ஊராட்சி - 18, 19, 20, 21, 22, 23, 24 ஆகிய 7 வாக்குச் சாவடிகள் கொண்ட கோடாங்கி பாளையம் ஊராட்சி - 146, 147, 148, 149 ஆகிய 4 வாக்குச் சாவடிகள் கொண்ட பருவாய் ஊராட்சி - 150, 151, 152, 153 ஆகிய 4 வாக்குச் சாவடிகள் கொண்ட கரடிவாவி ஊராட்சி - 154, 155 ஆகிய 2 வாக்குச் சாவடிகள் கொண்ட மல்லேகவுண்டம்பாளையம் ஊராட்சி - 156, 157 ஆகிய 2 வாக்குச் சாவடிகள் கொண்ட புளியம்பட்டி ஊராட்சி என மொத்தம் 6 ஊராட்சிகள்.

**பல்லடம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : ந. துரைமுருகன்,** 2/26, புளியம்பட்டி, பல்லடம், திருப்பூர்-641 658.

**பொங்கலூர் கிழக்கு ஒன்றியம் :** 345, 346, 347, 348, 349, 350, 351 ஆகிய 7 தொங்குட்டிபாளையம் ஊராட்சி 352, 353, 354, 355, 356, 357 ஆகிய 6 பெருந்தொழுவு ஊராட்சி 358, 359, 360, 361 ஆகிய 4 நாச்சிபாளையம் ஊராட்சி 374, 375, 376, 377, 378, 379, 380, 381, 382, 383, 384, 385, 386 ஆகிய 13 தெற்கு அவினாசிபாளையம் ஊராட்சி என மொத்தம் 4 ஊராட்சிகள்.

**பொங்கலூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : சா. பாலுசாமி,** 3/239, ரங்கபாளையம், நாச்சிபாளையம் (அ), திருப்பூர்-641606.

**பொங்கலூர் மேற்கு ஒன்றியம் :** 336, 337, 338, 339, 340, 341 ஆகிய 6 வாக்குச் சாவடிகள் கொண்ட உகாயனூர் ஊராட்சி - 342, 343, 344 ஆகிய 3 வாக்குச் சாவடிகள் கொண்ட வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி - 362, 363, 364, 365, 366, 367, 368 ஆகிய 7 வாக்குச் சாவடிகள் கொண்ட கண்டியன்கோவில் ஊராட்சி - 369, 370, 371, 372, 373 ஆகிய 5 வாக்குச் சாவடிகள் கொண்ட அலகுமலை ஊராட்சி என மொத்தம் 4 ஊராட்சிகள்.

**பொங்கலூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் : ப.கு கனகராஜ்,** ப. எண். 2/23, பு. எண். : 1/28, உகாயனூர், பண்ணை கிணத்துப்பாளையம், திருப்பூர்-641665.

**பொங்கலூர் வடக்கு ஒன்றியம் :** 322, 323, 324, 325, 326, 327, 328, 329, 330, 331, 332, 333, 334, 335 ஆகிய 14 வாக்குச் சாவடிகள் கொண்ட பொங்கலூர் ஊராட்சி - 316, 317, 318, 319, 320, 321 ஆகிய 6 வாக்குச் சாவடிகள் கொண்ட மாதப்பூர் ஊராட்சி - 395, 396, 397, 398, 399 ஆகிய 5 வாக்குச் சாவடிகள் கொண்ட வே.கள்ளிப்பாளையம் ஊராட்சி - 414, 415, 416, 417, 418 ஆகிய 5 வாக்குச் சாவடிகள் கொண்ட வே.வடமலைபாளையம் ஊராட்சி என மொத்தம் 4 ஊராட்சிகள்.

**பொங்கலூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : பெ.அசோகன்,** 2/35, வலையபாளையம், தொட்டம்பட்டி (அ), பொங்கலூர், திருப்பூர்-641667

**பொங்கலூர் தெற்கு ஒன்றியம் :** 387, 388, 389, 390, 391, 392, 393, 394 ஆகிய 8 வாக்குச் சாவடிகள் கொண்ட காட்டூர் ஊராட்சி 400, 401, 402 ஆகிய 3 வாக்குச் சாவடிகள் கொண்ட எலவந்தி ஊராட்சி 403, 404, 405, 406 ஆகிய 4 வாக்குச் சாவடிகள் கொண்ட கேத்தனூர் ஊராட்சி 407, 408, 409, 410, 411, 412, 413 ஆகிய 7 வாக்குச் சாவடிகள் கொண்ட வே.வாவிபாளையம் ஊராட்சி என மொத்தம் 4 ஊராட்சிகள்.

**பொங்கலூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் : ரா. சிவாச்சலம்,** 4/202, துண்டுக்காடு, காட்டூர்புதூர், காட்டூர் அஞ்சல், பொங்கலூர், திருப்பூர்-641667.

### திருப்பூர் தெற்கு மாநகரம்

### முத்தணம்பாளையம் பகுதி

**58வது வட்டம் :** 280, 282, 283, 284 ஆகிய 4 வாக்குச் சாவடிகள் .

**58வது வட்ட பொறுப்பாளர் : சா. ராஜேந்திரன்,** கே. செட்டிபாளையம், தாராபுரம் ரோடு திருப்பூர்- 4.

**58அ-வது வட்டம் :** 281, 285, 286 ஆகிய 3 வாக்குச் சாவடிகள் .

**58அ-வது வட்ட பொறுப்பாளர் : ஏ.கே. சௌந்தர்,** 1/931, எல்எஸ்ஜி நகர், கே. செட்டிபாளையம், தாராபுரம் ரோடு, திருப்பூர்-6.

**59-வது வட்டம் :** 296, 297, 301, 302 ஆகிய 4 வாக்குச்சாவடிகள்

**59-வது வட்ட பொறுப்பாளர் : த. கேசவன்** 3/31, அரசு நடுநிலைப்பள்ளி அருகில், முத்தனம்பாளையம் அஞ்சல், திருப்பூர் 641 606.

**59அ-வது வட்டம் :** 292, 293, 299, 300 ஆகிய 4 வாக்குச் சாவடிகள்

**59அ-வது வட்ட பொறுப்பாளர் : து. வேலுச்சாமி,** 5/752, அருவந்தோட்டம், அமராவதிபாளையம், முத்தனம்பாளையம் திருப்பூர்-6.

**60-வது வட்டம் :** 287, 288, 290, 298, 303 ஆகிய 5 வாக்குச் சாவடிகள்

**60-வது வட்ட பொறுப்பாளர் : எம்.சிவசாமி,** ரங்கேகவுண்டம் பாளையம், முத்தனம்பாளையம் (அஞ்சல்) திருப்பூர்-6.

**60அ-வது வட்டம் :** 289, 291, 294, 195 ஆகிய 4 வாக்குச் சாவடிகள்.

**60அ-வது வட்ட பொறுப்பாளர் : கே.கே.ராஜ்,** 5/156, ஆ.புதுப்பாளையம், முருங்கானந்தன்காடு தாராபுரம் ரோடு, திருப்பூர்-6.

### ஆண்டிபாளையம் பகுதி

**38வது வட்டம் :** 183, 185, 187, 193 ஆகிய 4 வாக்குச் சாவடிகள்

**38வது வட்ட பொறுப்பாளர் : எஸ்.தண்டபாணி,** 2/618-எச்ஆர், எச்.கே.நகர் 4வது வீதி, மங்களம் ரோடு, திருப்பூர்-641687,

**38அ-வது வட்டம் :** 184, 186, 188 ஆகிய 3 வாக்குச் சாவடிகள்.

**38அ-வது வட்ட பொறுப்பாளர் : எஸ்.கேசவன்,** 2/908 நேதாஜி ஐந்தாவது வீதி, எஸ் ஆர் நகர் வடக்கு, ஆண்டிபாளையம் அஞ்சல், திருப்பூர்- 641687,

**39வது வட்டம் :** 177, 178, 179, 180, 181, 182 ஆகிய 6 வாக்குச்சாவடிகள்

**39-வது வட்ட பொறுப்பாளர் : எம். முத்துக்குமாரசாமி,** 2/181 ஆண்டிபாளையம் அஞ்சல், திருப்பூர்-641687,

**39அ-வது வட்டம் :** 189, 190, 191, 192, 194, 195 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**39அ-வது வட்ட பொறுப்பாளர் : மா. சசிகுமார்,** 4/151 பாவடி வீதி, சின்னாண்டிபாளையம், ஆண்டிபாளையம் அஞ்சல், திருப்பூர்-641687.

**40வது வட்டம் :** 221, 222, 223, 224 ஆகிய 4 வாக்குச் சாவடிகள் .

**40வது வட்ட பொறுப்பாளர் : தெ.நா.சீனிவாசன்,** 2/354 இடுவம்பாளையம் அஞ்சல், திருப்பூர் - 641687,

**40அ-வது வட்டம் :** 225, 226, 227 ஆகிய 3 வாக்குச் சாவடிகள்.

**40அ-வது வட்ட பொறுப்பாளர் : கோ.ஆனந்தன்,** 2/418-ஈ6, தனலட்சுமி நகர், இடுவம்பாளையம் & அஞ்சல், திருப்பூர் - 641687.

**41-வது வட்டம்:** 230, 234, 235, 236, 237, 239 ஆகிய 6 வாக்குச்சாவடிகள்

**41-வது வட்ட பொறுப்பாளர் : ஆர்.விவேகானந்தன்,** 3/278 முருகம்பாளையம், இடுவம்பாளையம் அஞ்சல், திருப்பூர் - 641687.

**41அ-வது வட்டம்:** 228, 229, 231, 232, 233, 238 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**41அ-வது வட்ட பொறுப்பாளர் : எம். பாண்டி,** விஜயா காம்பவுண்ட் மாரியம்மன் கோவில் கிழக்கு வீதி, முருகம்பாளையம், இடுவம்பாளையம் அஞ்சல், திருப்பூர்- 641 687,

### வீரபாண்டி பகுதி

**53வது வட்டம் :** 269, 270, 271, 276, 278, 279 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**53வது வட்ட பொறுப்பாளர் : சு. ரவீந்திரகுமார்,** 3/272, குப்பாண்டம்பாளையம், வீரபாண்டி, திருப்பூர் - 5,

**53அ-வது வட்டம் :** 272, 273, 274, 275, 277 ஆகிய 5 வாக்குச் சாவடிகள்.

**53அ-வது வட்ட பொறுப்பாளர் : கே.நாச்சிமுத்து,** 4/795, தாய் நகர், வீரபாண்டி, திருப்பூர் - 5,

**54வது வட்டம் :** 252, 253, 254, 255, 256, 257, 258, 260ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**54வது வட்ட பொறுப்பாளர் : பி. மோகன்ராஜ்,** நாலேத்து தோட்டம், வீரபாண்டி, திருப்பூர் - 5

**54அ-வது வட்டம் :** 259, 261, 262, 263, 264, 265, 266 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்

**54அ-வது வட்ட பொறுப்பாளர் : வி. விவேகானந்தன்,** 2/280ஏ, கிருஷ்ணா நகர், வீரபாண்டி, திருப்பூர் - 5

**57-வது வட்டம் :** 244, 245, 247, 248, 249, 250, 251 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**57-வது வட்ட பொறுப்பாளர் : டி. நேதாஜி கண்ணன்,** 1/1359, தீபா நகர், பலவஞ்சிபாளையம், திருப்பூர்- 4.

**57அ-வது வட்டம் :** 240, 241, 242, 243, 246, 267, 268 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்

**57அ-வது வட்ட பொறுப்பாளர் : கே. தங்கதுரை,** 1/630-சி, வள்ளலார் நகர், திருப்பூர்- 4.

### திருப்பூர் தெற்கு ஒன்றியம்

**மங்கலம் ஊராட்சி :** 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 206, 207, 208, 209, 210, 211, 212 ஆகிய 17 வாக்குச் சாவடிகள்.

**இடுவாய் ஊராட்சி :** 213, 214, 215, 216, 217, 218, 219, 220 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்.

**முதலிபாளையம் ஊராட்சி :** 304, 305, 306, 307, 308, 309, 310, 311, 312 313, 314, 315 ஆகிய 12 வாக்குச் சாவடிகள்.

### பல்லடம் நகரம்

| | |
|---|---|
| 1வது வார்டு : 131, 132 ஆகிய 2 வாக்குச் சாவடிகள், | 2வது வார்டு : 133, 134 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். |
| 3வது வார்டு : 129, 130 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். | 4வது வார்டு : 108, 109 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். |
| 5வது வார்டு : 119, 120 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். | 6வது வார்டு : 127வது வாக்குச் சாவடி. |
| 7வது வார்டு : 128வது வாக்குச் சாவடி. | 8வது வார்டு : 118வது வாக்குச் சாவடி. |
| 9வது வார்டு : 117, 121, 122, 123 ஆகிய 4 வாக்குச் சாவடிகள். | 10வது வார்டு : 102, 111 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். |
| 11வது வார்டு : 98, 101, 110 ஆகிய 3 வாக்குச் சாவடிகள். | 12வது வார்டு : 103, 104, 105 ஆகிய 3 வாக்குச் சாவடிகள். |
| 13வது வார்டு : 99, 100 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். | 14வது வார்டு : 96, 97 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். |
| 15வது வார்டு : 106, 107 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். | 16வது வார்டு : 124, 125, 126 ஆகிய 3 வாக்குச் சாவடிகள். |
| 17வது வார்டு : 115, 116 ஆகிய 2 வாக்குச் சாவடிகள். | 18வது வார்டு : 112, 113, 114 ஆகிய 3 வாக்குச் சாவடிகள். |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 01.08.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## இன்று நினைவு நாள்!

# தீரன் சின்னமலை திருவுருவச்சிலைக்கு மாலை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அணிவிக்கிறார்!

*சென்னை, ஆக. 3-*

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாள் 3.8.2025 இன்று அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 3.8.2025 இன்று காலை 10.00 மணியளவில் சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

தீரன் சின்னமலை, ஈரோடு மாவட்டம் காங்கேயம் அருகில் மேலப்பாளையம் என்னும் சிற்றூரில் பிறந்தார். இரத்தினசாமிகவுண்டர் பெரியாத்தா ஆகியோரின் மகனாகப் பிறந்த இவரது இயற்பெயர் தீர்த்தகிரி. தீரன் சின்னமலை அவர்கள் இளம் வயதிலேயே போர்க்கலைகளான வாள்பயிற்சி, வில் பயிற்சி, சிலம்பாட்டம், மல்யுத்தம், தடிவரிசை போன்றவற்றைக் கற்றுத் தேர்ந்து சிறந்த இளம் வீரராகத் திகழ்ந்தார்.

பல்வேறு துணிச்சலான போர்க்கலைகளைக் கற்றுத் தேர்ந்து, போர் யுக்திகளைத் தனது படைகளுக்குக் கற்றுத் தந்தார். இந்திய விடுதலைப் போரில் பங்கேற்று ஆங்கிலேயர்களுக்குச் சவால் விட்டு அவர்களின் கிழக்கிந்தியக் கம்பெனியை அடியோடு ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

கோவை, ஈரோடு சேர்ந்த கொங்குப் பகுதி அந்நாளில் மைசூர் சமஸ்தானத்தின் உடையார் மரபினர் ஆட்சியின் கீழ் இருந்தது. அந்த கொங்குப் பகுதியில் வரி வசூல் செய்து மைசூருக்கு எடுத்துச் செல்லப்பட்ட பணத்தை - எங்கள் பணம் ஏன் மைசூருக்குச் செல்ல வேண்டும் என தடுத்து, அப்பணத்தைப் பறித்து ஏழைகளுக்கு உதவினார். அதனால் சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையே ஒரு சின்னமலை என்று புகழ் பெற்றார் தீரன் சின்னமலை.

கொங்குப் பகுதி வீரர்களைத் திரட்டி பயிற்சி அளித்து கொங்குப் படையை அமைத்தார். ஈரோட்டிற்கு அருகில் ஓடாநிலை என்னும் இடத்தில் கோட்டை அமைத்துப் படை பலம் பெருக்கினார். ஆங்கிலேயர் வசமாக இருந்த கோவைக் கோட்டையை 3.6.1800 அன்று மீட்பதற்குத் திட்டமிட்டு மருதுபாண்டியர் மற்றும் சில பாளையக்காரர்கள் உதவியுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட திட்டமிட்டார். எனினும் சிலருடைய ஆர்வக்கோளாறுக் காரணமாக திட்டமிடப் பட்ட நாளுக்கு முன்பாக நடைபெற்ற முயற்சிகளால் எதிரிகள் முந்திக்கொள்ள தீரன் சின்னமலையின் முயற்சி பாழானது.

தீரன் சின்னமலையின் வீரம் அறிந்த ஆங்கிலேயர் கம்பெனி ஆதிக்கத்தை சின்னமலை ஏற்றால் அவருக்கு அப்பகுதியை ஒப்படைப்பதாகவும், அப்பகுதியிலிருந்து வரிவசூல் செய்து ஒரு பகுதியைக் கம்பெனிக்கு அளிக்க வேண்டும் என்றும் ஆங்கிலேயர் பேரம் பேசினர். அதை சின்னமலை ஏற்கவில்லை.

அதன்பின், சின்னமலையை ஒழிக்க முயன்று 1801இல் காவிரிக் கரையிலும் 1802இல் ஓடாநிலையிலும், 1804இல் அரச்சலூரிலும் என மூன்று முறை போர் நடத்தியும் ஆங்கிலேயர் தோற்றனர். ஓடாநிலைப் போரில் ஆங்கிலக் கம்பெனி தளபதி மேக்ஸ்வெல் சின்னமலையால் கொல்லப்பட்டார்.

போரில் சின்னமலையை வெல்லமுடியாத ஆங்கிலேயர் சின்னமலையின் சமையல்காரனுக்கு ஆசைகாட்டி, அவன் உதவியோடு சின்னமலையைக் கைது செய்து ஆடிப்பெருக்கு நாளான 31.7.1805 அன்று சங்ககிரிக் கோட்டையில் தூக்கிலிட்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் சென்னை, கிண்டியில் பாய்ந்து செல்லும் குதிரை மீது அமர்ந்துள்ள தோற்றத்தில் தீரன் சின்னமலையின் முழு உருவச் சிலையினை அமைத்து 4.10.1998 அன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, நடைபெறும் இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

## சிங்கப்பூரில் பெண்ணைக் காப்பாற்றிய

# தமிழ்நாட்டு ஊழியருக்கு முதல்வர் பாராட்டு!

*சிங்கப்பூர், ஆக. 3-*

26 ஜூலை 2025 சனிக்கிழமை மாலை சிங்கப்பூரில் தஞ்சோங் காத்தோங் பகுதியில் சாலையில் ஏற்பட்ட புதைகுழியில் காருடன் விழுந்த பெண்ணை, அப்போது அருகில் பணியில் இருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்டுமானத்தள மேற்பார்வையாளர் பிச்சை உடையப்பன் சுப்பையா சமயோசிதமாகச் சிந்தித்து, அவருடன் வேலை செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆறு தொழிலாளர் நண்பர்களின் உதவியுடன் துரிதமாகச் செயல்பட்டுக் காப்பாற்றினார்.



சிங்கப்பூரின் அதிபர் தர்மன் சண்முகரத்தினம் அவர்கள் உள்ளிட்ட பலரும், பொதுமக்களும் அந்தத் தொழிலாளர்களைப் பாராட்டி வருகின்றனர். அதிபர் அவர்கள் அனைவரையும் இன்று ஞாயிற்றுக் கிழமை தன்னைச் சந்திக்கவும் அழைப்பு விடுத்திருக்கி றார்.

பிச்சை உடையப்பன் சுப்பையாவைப் பாராட்டி, தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுப்பியிருந்த தனிப்பட்ட பாராட்டுக் கடிதத்தை, அயலக நலவாரிய உறுப்பினர் ராம் அவர்கள் நேற்று சிங்கப்பூரில், சுப்பையாவின் பணியிடத்துக்கு நேரில் சென்று சந்தித்து ஒப்படைத்தார். முதல்வர் சார்பில் பாராட்டையும் தெரிவித்தார். அவருடன் கவிஞர் இறை.மதியழகன், சசிகுமார் ஆகியோரும் சென்று பாராட்டினர்.

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவது மட்டுமல்ல, பெருமையும் தேட முடியும் என்பதை நிரூபித்துள்ள தங்களுக்கு என்னுடைய பாராட்டுகள். அயல்நாட்டிலும் தமிழரின் பரந்த மனமும் மனிதநேயமும் அங்கீகரிக்கப் படுவதற்குத் தங்களது இந்தச் செயல் உதவியுள்ளதைப் பார்த்துப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.” என்று முதல்வர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். முதல்வர் அவர்களே பாராட்டுக் கடிதம் அனுப்பியுள்ளது மனதுக்கு மகிழ்ச்சியாகவும் தனக்கு மிகவும் பெருமையாக இருப்பதாக, சுப்பையா கூறினார்.

47 வயது மேற்பார்வையாளர் பிச்சை உடையப்பன் சுப்பையா காரைக்குடியைச் சேர்ந்தவர். உடன் இணைந்து அப்பெண்ணை மீட்க உதவிய அவரது சக ஊழியர்கள் அன்பழகன், வேல்முருகன் 26, பூமாலை சரவணன் 28, கணேசன் வீரசேகர் 32, போஸ் அஜித்குமார் 26, ஆறுமுகம் சந்திரசேகரன் 47, சாத்தப்பிள்ளை ராஜேந்திரன் 55 ஆகியோர் அனைவரும் தமிழ்நாட்டிலிருந்து அங்கு சென்று பணிபுரிந்து வருபவர்கள்.




திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட ஒண்டி குப்பம் பகுதியில் சலவை தொழிலாளர் குடியிருப்பு உள்ளது இங்கு வசிப்பவர்களுக்கு 2019 ஆம் ஆண்டு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ஐந்து பிரிவுகளாக 160 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டது இந்நிலையில் பயனாளர் பங்கீட்டுத் தொகையினை முழுவதுமாக செலுத்திய பயனாளிகளுக்கு திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் கிரைய பத்திரத்தை வழங்கினார்,